# ஒப்பந்தங்கள்

**உங்கள் பணத்தை நிர்வகித்தல் மெய்த்தகவல் தாள்**



## ஒப்பந்தம் என்றால் என்ன?

**ஒப்பந்தம்** என்பது ஒரு சட்டபூர்வமான உடன்படிக்கை. உடன்படிக்கை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கிடையே ஏற்படும் புரிந்துணர்வாகும்.

கையெழுத்திடுவதாலும், (வாய்மொழியாக) செய்கிறேன் என்று வார்த்தைகளால் சொல்வதாலும் அல்லது வலைத்தளத்தில் இணைய படிவம் ஒன்றில் நீங்கள் ஒத்துக் கொள்கிறேன் என்று குறியிடுவதாலும் நீங்கள் ஓர் ஒப்பந்தத்தை ஒத்துக் கொள்ள முடியும்.

### ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது

கையெழுத்திடுவதன் மூலம் நீங்கள் எழுதப்பட்ட ஒப்பந்தத்தை ஒத்துக்கொள்கிறீர்கள். அதாவது நீங்கள் உங்கள் பெயரை அந்த ஒப்பந்தத்தில் எழுதும்போது (கையெழுத்து).

### வாய்மொழி ஒப்பந்தம்

நீங்கள் வார்த்தைகளைப் பயன்படுத்தி எதையாவது வாங்க விரும்புகிறேன் அல்லது செய்ய விரும்புகிறேன் என்று சொன்னால், நீங்கள் வாய்மொழி ஒப்பந்தத்துக்கு ஒத்துக்கொள்கிறீர்கள். இதில் 'ஆம' அல்லது 'நான் ஒத்துக்கொள்கிறேன்' போன்ற வார்த்தைகள் அடங்கும். மின்சாரம் அல்லது கைத்தொலைபேசி போன்ற சேவைகளைப் பெறுவதைப் பற்றி யாராவது ஒருவருடன் பேசும்போது நீங்கள் பொதுவாக ஒரு வாய்மொழி ஒப்பந்தம் செய்து கொள்கிறீர்கள். இது நேரிடையாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ இருக்கலாம்.

### உடன்படிக்கை என்றால் என்ன?

உடன்படிக்கை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கிடையே ஏற்படும் புரிந்துணர்வாகும். அது ஓர் ஒப்பந்தம் அல்ல. எடுத்துக்காட்டாக, நண்பர் ஒருவருக்காக உங்கள் காரில் ஏற்றிக்கொள்ள நீங்கள் வாக்களித்தீர்கள் என்றால் அது ஒரு உடன்படிக்கை. அது சட்டமல்ல.

### நீங்கள் புரிந்துகொள்ளாத வரையில் ஒப்பந்தத்தை ஒத்துக் கொள்ள வேண்டாம்

ஒப்பந்தம் போடுவதற்கு முன் நீங்கள் அனைத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். பல முக்கிய ஒப்பந்தங்களில் நீங்கள் கையெழுத்திட வேண்டியதிருக்கலாம். எடுத்துக்காட்டாக, வீடு ஒன்றை வாடகைக்கு எடுக்க, வங்கிக் கணக்கு ஒன்று தொடங்க... போன்றவை. நம்பத்தகுந்த நபரிடமிருந்து உடனடியாய் உதவி எவ்வாறு கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

## நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

- ஒப்பந்தம் என்பது ஒரு சட்டபூர்வமான உடன்படிக்கை.
- நீங்கள் புரிந்து கொள்ளாத எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திட வேண்டாம்.
- நீங்கள் மனதை மாற்றிக்கொள்வதால் சில ஒப்பந்தங்களை இரத்து செய்ய முடியாது.

### எதையும் நீங்கள் ஒத்துக்கொள்வதற்கு முன் புரிந்துகொள்வது அவசியமாகும்.

ஹயட் அவருடைய வீட்டுக்கதவு தட்டப்படுவதைக் கேட்டுச் சென்று பார்க்கிறார். அவரிடம் விற்பனையாளர் ஒருவர் வேக்வம் கிளீனர் வாங்குவதைப் பற்றி அதிவேகமாகப் பேச ஆரம்பிக்கிறார். ஹயட் விற்பனையாளரை வீட்டுக்குள் அனுமதிக்கிறார்.

விற்பனையாளர் வேக்வம் கிளீனர் எவ்வாறு வேலை செய்கிறது என்பதை அவருக்குக் காண்பிக்கிறார். அதன்பின் அவரிடம் ஓர் ஒப்பந்தத்தைக் கொடுக்கிறார். வாக்வம் கிளீனரை வாங்க ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டியதிருக்கும் என்று விற்பனையாளர் ஹயட்டிடம் கூறுகிறார்.

விற்பனையாளர் வேகமாகப் பேசுவதாலும், ஆங்கிலம் இன்னும் பழகாததாலும், ஹயட் கேள்விகளைக் கேட்பதற்குத் தயக்கமாய் உணர்கிறார். கையெழுத்திடுவதற்கு முன் ஒப்பந்தத்தைப் புரிந்துகொள்ள அவருக்கு உதவி தேவைப்படுகிறது என அவர் கூறுகிறார்.

ஹயட் விற்பனையாளரிடம் அந்த ஒப்பந்தத்தில் என்ன இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள அவருக்கு கொஞ்ச காலம் தேவைப்படுகிறது என்று சொல்லி ஒப்பந்தத்தை விட்டுச் செல்ல வேண்டுகிறார்.

ஹயட் தன்னுடைய நண்பர் மிராண்டாவிடம் உதவி வேண்டுகிறார். மிராண்டா ஹயட்டை அழைத்துக்கொண்டு இலவச சமுதாயச் சட்ட மையத்திலிருக்கும் அலுவலர்களில் ஒருவரைப் பார்க்கச் செல்கிறார்.

அந்த வேக்வம் கிளீனர் அதிக விலையாகும் என்றும் உதவி பெறாமல் அந்த ஒப்பந்தத்தில் ஹயட் கையெழுத்திடுவது நல்லதல்ல என்றும் அலுவலர் ஹயட்டுக்கு விளக்குகிறார். எப்போதும் நீங்கள் நம்பிக்கை வைத்துள்ள யாரிடமாவது உதவி கேட்பது அவசியம் என்று அலுவலர் விளக்குகிறார்.

MONEYSMART

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

## மேலதிகத் தகவல்களை எங்கே பெறலாம்

கடன் ஒப்பந்தங்களைப் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, MoneySmart இணையதளமான **www.moneysmart.gov.au** என்ற முகவரிக்குச் செல்லுங்கள் அல்லது 1300 300 630 என்ற எண்ணுக்கு அழையுங்கள்.

கேஸ், மின்சாரம் அல்லது தொலைபேசி ஒப்பந்தத்தில் உங்களுக்குப் பிரச்சினை எதுவும் இருந்தால், உங்கள் சேவை வழங்குவோரை அழையுங்கள்.

### நியாய வணிக அலுவலகங்கள்

வீட்டு வாசற்படி விற்பனை, கார், கைத்தொலைபேசி அல்லது வாடகை ஒப்பந்தத்தில் உங்களுக்குப் பிரச்சினை எதுவும் இருந்தால், உங்களுக்கு உதவ உங்கள் மாநில அல்லது பிரதேச நியாய வணிக அலுவலகத்தை அழையுங்கள்.

உங்கள் மாநில அல்லது பிரதேச நியாய வணிக அலுவலகத்தைக் கண்டுபிடிக்க, **www.consumerlaw.gov.au** என்ற இணையதளத்துக்குச் செல்லுங்கள்.

### சமுதாயச் சட்ட மையங்கள்

ஒப்பந்தத்தில் சட்டப் பிரச்சினைகள் ஏதாவது இருந்தால், இலவச சமுதாயச் சட்ட மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள். சமுதாயச் சட்ட மையங்கள் பொதுமக்களுக்கு இலவச சட்ட சேவைகளை வழங்கும் சுயேட்சையான, சமூக நிறுவனங்களாகும். தேசிய சமுதாயச் சட்ட மையங்கள் சங்கம், **www.naclc.org.au**, என்பது ஆஸ்திரேலியாவிலுள்ள மாநில மற்றும் பிரதேச சமுதாயச் சட்ட மைய நிறுவனங்களின் சங்கமாகும். உங்களுக்கு மிக அருகில் இருக்கும் இலவச சமுதாயச் சட்ட மையத்தைப் பற்றிய விவரங்களுக்கு **www.naclc.org.au/directory** என்ற இணையதளத்துக்குச் செல்லுங்கள்.

### தொலைத்தொடர்புத் தொழிலக ஓம்புட்ஸ்மன்

உங்கள் தொலைபேசி அல்லது இணைய ஒப்பந்தத்தில் அல்லது சேவை வழங்குவோரிடத்தில் உங்களுக்குப் பிரச்சினைகள் இருந்தால், நீங்கள் தொலைத்தொடர்பு மற்றும் தொழில்துறை ஓம்புட்ஸ்மன் இணையதளமான **www.tio.com.au** என்ற முகவரிக்குச் செல்லவும் அல்லது 1800 062 058 என்ற எண்ணுக்கு அழையுங்கள் - ஆஸ்திரேலிய வீட்டுத் தொலைபேசியிலிருந்து கட்டணம் கிடையாது.



© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை